அரசினா் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை – 641 014.

குறிப்பாணை எண் : 1540/இ1/2022/நாள் : .02.2023

பொருள் : ஆதிதிராவிடர் நல 2022-2023 –ம் கல்வியாண்டுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை தொடர்பாக அனைத்து மாணாக்கர்களையும் Student login வழியாக பதிவு செய்யக் கோருவது –தொடர்பாக.

பார்வை : கோவை ,துணை ஆட்சியர்/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர் (பொ)அவர்களின் ந.க.எண். 566/2022/கா.10/நாள்:03.02.2023.

***************

பார்வையில் காணும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு, இக்கல்லூரியில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டுகளில் பயிலும் SC/ST மாணவர்கள்,நடப்பு 2022-2023-ம் கல்வியாண்டிற்கான ''புதியது/புதுப்பித்தல்'' கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும்போது அதற்கான விவரங்களை Student login மூலமாக இணைய வழியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் Portal –க்கு சென்று இணைப்பில் காணும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9/2/23
முதல்வர்

பெறுநர்
அனைத்துத் துறைத் தலைவர்கள்
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
தங்கள் துறையில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இதன் பொருட்டு பயன்பெற ஏதுவாக அவர்களுக்கு இதன் விவரத்தை தெரிவித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் : அறிவிப்புப் பலகை (கல்லூரி பிரதான கட்டிடம் மற்றும் விடுதி)
''இணையதளம்''

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இணையதளத்தில்

மாணாக்கர்கள் பதிவு செய்யும் முறை

தேவையான ஆவணங்கள்

1. ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி
2. மின்னஞ்சல் முகவரி
3. இணையதள சாதிசான்றிதழ் வருமான சான்றிதழ்
4. 10 மற்றும் 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி சான்றிதழ்
5. ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு

Link

https://tnadtwscholarship.tn.gov.in/-

6. Student sign up -இல் சென்று ஆதார் எண், கொடுக்கப்பட வேண்டும். ஆதார் எண் இணைக்கப்பட்ட அலைபேசி எண்ணிற்கு OTP வரும், பின்பு மாணவரின் புகைப்படத்துடன் கூடிய ஆதார் தகவல் வரும் அதை சரிபார்த்து ok கொடுக்க வேண்டும்

7. மாணாக்கரின் E-Mail Mobile Number கொடுத்தல் வேண்டும். மாணாக்கரின் கல்வி உதவித்தொகை இணையதளத்திற்கு E-Mail ID (User Name) அலைபேசி எண் (Password) எடுத்துக் கொள்ளப்படும் பின்பு Student sign up சென்று User ID Password (8 Digit with Special Characters) கொடுத்து student profile create (Student Name Date of Birth Mail id, Mobile Number Mother Occupation Father Occupation Address செய்தல் வேண்டும். ( பின்பு சரிபார்த்து Save Button Click செய்தல்)

8 இணையவழி விண்ணப்பிக்கப்பட்ட சாதிசான்றிதழ் எண் கொடுக்கப்பட வேண்டும் ( Fetch income Certificate Details Button ok செய்தல்) பின்பு மாணவரின் சுய விபரம் திரையில் தோன்றும் சரிபார்த்து Yes Button Click செய்ய வேண்டும்.

9 இணையவழி விண்ணப்பிக்கப்பட்ட வருமான சான்றிதழ் எண் கொடுக்கப்பட வேண்டும் ( Fetch income Certificate Details Button ok செய்தல்) மாணவரின் சுயவிபரம் திரையில் தோன்றும் சரிபார்த்து Yes Button Click செய்ய வேண்டும்.

10 ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு எண் கொடுக்கப்பட வேண்டும் (Fetch bank Details BUTTON Click செய்தல் ) வங்கி விவரம் திரையில் தோன்றும் சரிபார்த்து Yes Buton Click செய்ய வேண்டும்.

11 மாணாக்கரின் கல்வி விபரம் பதிவு செய்ய வேண்டும்.

12 மாணாக்கர் அளித்த விபரம் சரி என்று விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

அ/3

முதல்வர் 9/2/23

9/2/23